Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 24 | (06 - 04 - 1992) | திங்கட்கிழமை | ஓசை: 48

## உள்வாரி வெளிவாரி பட்டம் சமனானதரம் உடையன

நியமனங்கள் பதவி உயர்வுகளின் போது திறந்த பல்கலைக்கழகம் உட்பட பல்கலைக்கழக மானியக் குழுவின் அதிகாரத்தின் கீழ் இயங்கும் வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் வழங்கும் ஒரே மட்டத்திலான பட்டங்கள் யாவும் சமதரமானவையாக கணிக்கப்பட வேண்டும் என பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கைமூலம் கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறான பட்டங்கள் 'உள்வாரி அல்லது வெளிவாரி என்ற பாகுபாடின்றி சமதரமாக கணிக்கப்பட வேண்டும். அத்துடன் ஆட்சேர்ப்புக்குத் தேவையான தராதரங்களை விளம்பரத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இந்தியப் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தென்னிலங்கைப் படுகொலைகளுக்கு ஐ. தே. க. அரசாங்கமே முழுப்பொறுப்பு

## பீரங்கித் தாக்கு

(யாழ்ப்பாணம்)

மாதகல், திருவடி நிலை ஆகிய கடற் பிராந்தியத்தில் இருந்து பொது மக்கள்வாழும் பகுதிகளை நோக்கி சிறிலங்கா கடற்படையினரால் பீரங்கித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு

ஆரியாலை அருணோதயா சனசமூக முன்றில்நேற்று தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது.

## புலிகளுக்கு ஆதரவான செல்வந்தர்கள் பற்றி தகவல் கிடைத்துள்ளதாம்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பெரும் செல்வந்தர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் பற்றிய தகவல்கள் பொலிஸ் தலைமையகத்திற்கு கிடைத்துள்ளதாக 'லங்காதீப' என்ற சிங்களப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தகைய விபரங்களை உள்ளடக்கிய சுமார் ஆயிரம் புகார்கள் கிடைத்திருப்பதாகவும், இதனையடுத்து இரத்மலானை, ஜாஎல, கந்தான கொழும்பு, நீர்கொழும்பு போன்ற இடங்களில் சுமார் முப்பது பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## அம்பாறை மாவட்டத்தில் புதிய இரு உ. அ. அ. பிரிவு

அம்பாறை மாவட்டத்தில் நிருவாகத்தைப் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் பொத்துவில், சம்மாந்துறை உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளில் மேலும் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் செயற்படவுள்ளன.

இதற்கான பணிமனைகள் பொத்துவில் பிரிவுக்குகோமாரியிலும் சம்மாந்துறைப் பிரிவுக்கு நாவிதன் வெளியிலும் அமைக்கப் படவிருக்கின்றன.

இதற்கான நிதி அம்பாறை மாவட்ட பாரா்ளுமன்ற உறுப்பினரின் வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து வழங்கப் படும்.

புதிய கட்டடங்கள் அமைக்கப்படும் வரை தற்காலிக கட்டடங்களில் இவை இயங்கவுள்ளன. இவற்றின்முக்கியசெயற்பாடுகளாக மீளக் குடியமர்த்தல் இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது

## விசாரணைக் குழு அமைக்குமாறு கோருகிறார் உடுகம்பொல

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்ப்பவர்களைக் கொல்வதற்கென 'கரும் பூனைகள்' என்னும்கொலைகாரப்படையை ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உருவாக்கியிருந்தனர் என முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல குற்றம் சாட்டியுள்ளார். இவர்களால் கொல்லப்பட்ட 156 பேர்களின் பட்டியல் தன்னிடமுள்ளதாகத் தெரிவித்துள்ள உடுகம்பொல, இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸ ஓர்விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரான உடுகம்பொல ஜே வி. பியினரின் கிளர்ச்சிக் காலத்தில் பல படுகொலைகளுக்குக் காரணமானவர் என மனித உரிமை ஸ்தாபனங்களினால் பலமான கண்டனத்திற்கு உள்ளானவர்.

தற்பொழுது. தலைமறைவாகவுள்ள திரு. உடுகம்பொல கைச்சாத்திட்டு வெளியிட்ட அறிக்கைஒன்றில் 'கரும்பூனைகளினால் கொல்லப்பட்ட சிறிலங்கா மற்றும் கட்சி உறுப்பினர்கள் 156 பேரின் பெயர்ப் பட்டியல் தன்னிடமுள்ளதாகத்தெரிவித்துள்ளார்.

தனக்குஎதிராக நேரடியான குற்றச்சாட்டுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனத் தெரிவித்துள்ள உடுகம்பொல பொலிசும், இராணுவமும்செய்ததாகக் கூறப்படும் கொலைகள்அரசின்ஆதரவாளர்களின் செயலேஎன்றும், இது குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்றை நியமித்தால் தனது இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தகவல்களைச் சமர்ப்பிக்கத் தான் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பதவியிலிருந்து ஓய்வுபெறும்படி தான் நிர்ப்பந்திக்கப்பட்டதற்கு மனித உரிமைகள் மீறல் பற்றிய தகவல் காரணமல்ல என்றும், இப்போது அரசுக்கெதிராக திரும்பிப் பிரசாரம் செய்து முன்னாள் அமைச்சர்கள் இருவருடன் தனக்குத் தொடர்பு உண்டு என்று அரசு கருதுவதே தனது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆடுவளர்க்க நிதி ஒதுக்கீடு

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி கிழக்கில் நாகர் கோயில் மேற்கு, பொற்பதி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் ஆடு வளர்ப்பிற்காக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை வடக்கு கிழக்கு பிரதேச செயலர் திரு. ஜே. ஜெதீஸ்வரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே. சிவரட்ணம் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக அண்மையில் ஆரம்பித்து வைத்தார்கள் (36

## தெற்கில் காரணமின்றி கைது; வழக்கறிஞர்சங்கம் கண்டனம்

(கொழும்பு)

விழாக்களின் போதும், பொதுநிகழ்ச்சிகளின் போதும் அப்பாவிமக்கள் காரணமின்றி கைது செய்யப்படுவதும் தடுத்துவைக்கப் படுவதும் சிறிலங்காவின் தென்பகுதியில்வழமையாகி விட்டது. இவ்வாறு பொலிசாரால் கண்டபடி மக்கள் கைது செய்யப் படுவதையும் தடுத்து வைக்கப் படுவதையும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திகளுக்குமான வழக்கறிஞர்சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் அரசு மீதும் குற்றம் சாட்டியுள்ளது.

மேற்படிசங்கம்இவ்வாறான செயல்களைக் கண்டிக்கும் மகஜர் ஒன்றை கடந்த 28 ஆம் திகதி பிரதம நீதி அரசருக்கு

செய்யப்பட்டிருக்கின்றனர். சுவீப் டிக்கட் விற்பவர்கள், செருப்புத் தைப்பவர்கள், குடைதிருத்துபவர்கள், பழவகை, இளநீர், மரக்கறி விற்பவர்கள் மற்றும்நடைபாதை வியாபாரிகளும் இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் அடங்குவர்.

இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் வசதிகுறைந்த சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டி

# இராணுவ சீர்குலைவை தடுத்துநிறுத்த

திருமணமாகாத இளம் பெண்கள் உட்பட பலதரப் பட்டவயதினர் இவ்வாறுகைது

பதிகள் சென்று பார்வையிடும் வழக்கமும்தற்பொழுதுநிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

# அரசாங்கம் அவசர நடவடிக்கை

[கொழும்பு]

வடகிழக்கு யுத்தத்தின் விளைவாக கட்டுப்பாடு தளர்ந்து சிக்கலுக்கு உள்ளாகியிருக்கும் இராணுவத்தை சீரமைப்பதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முப்படை நிர்வாக அமைப்பில் மாற்றம், அதிகாரிகள் இடமாற்றம், மேலதிக பயிற்சித் திட்டம், போர் யுக்திகள் குறித்து மறுபரிசிலனை போன்ற பல சீரமைப்புத் திட்டங்கள் அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் ஏற்பட்ட பாரிய உயிர்ச்சேதங்கள், ஆயுதஇழப்புகள், யுத்தப்பின்னடைவுகள், படைவிலகல்கள், படைவுறுதித் தவர்வுகள் ஆகியன காரணமாக இராணுவக் கட்டமைப்பில் ஏற்பட்டுவரும் சீர்குலைவை தடுத்து நிறுத்தவே இந்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளை இனிமேல் சிறிலங்காவின் முப்படைகளின் தளபதிகளே தீர்மானித்து மேற்கொள்வர் என சிறிலங்காபாதுகாப்புஅமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால்கெரில்லா இராணுவப் பயிற்சி பெற்று கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தில் கடமைக்கு விடப்பட்ட இராணுவ, கடற்படை, விமானப் படை அதிகாரிகள் அங்கிருந்து திருப்பி அழைக்கப்பட்டு மீண்டும் முப்படைத் தளபதிகளின் கீழ் பணியாற்ற அனுமதிக்கப் படுவர்.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் கட்டுப்பாட்டு வழிநடத்துதலின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்த முப்படைகளும் இனிமேல் சுயாதீனமாக இயங்கும் எனவும் தெரிகிறது. இதற்கான பணிப்பு விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம்தெற்கில் ஜே.வி.பி நடவடிக்கைகளை ஒழிப்பதில் ஈடுபடும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனி. அகதிமுகாம்களில் இல. திருப்பியோர் அவதி

(வவுனியா)

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள் தாம் தங்க வைக்கப்பட்ட தாண்டிக்குளம் வேப்பங்குளம் முகாம்களில் போதிய வசதியின்றி அவதிப் படுகின்றனர் எனத்தெரிவிக் கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து தாயகம் திருப்பிய சுமார் ஐந்நூறு அகதிக் குடும்பங்கள் தங்கியிருக்கின்றனர்.

தாண்டிக்குளம் முகாமில் உள்ள அகதிகளுக்கு தண்ணீர் வசதி இல்லை. இவர்களுக்கு பௌசர் மூலமே தண்ணீர் வழங்கப்படுகின்றது என்றும், இவை போதுமானதாக இல்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் கண்ணோய், வயிற்றோட்டம், அம்மை போன்றவை இந்த முகாமில் உள்ளவர்கள் மத்தியில் பரவ ஆரம்பித்துள்ளன.

இந்த முகாம்களிலுள்ள அகதிகளில் பெரும்பாலானோர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள்என்றும், இவர்கள் தம்மைச் சொந்த இடங்களுக்கே திருப்பி அனுப்பச் சொல்லி வற்புறுத்துகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று சங்கானை வட்டவைப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 00 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணிவரை அடையாள உண்ணா விரதமும் பிற்பகல் 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் இடம் பெறவுள்ளன. இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் இறையவன், மதிவாணி, தமிழ்வாணன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

## கட்டுக்கோப்பு மிக்க புலிகளை வெல்வது முடியாத காரியம்

### இந்திய இராணுவ அதிகாரி

மக்கள் முழுமனதோடு ஆதரவளிக்கும் விடுதலைப் புலிகளைப் போன்ற கட்டுக்கோப்பான இயக்கம் எதையும் எந்த இராணுவத்தாலும் வெற்றிகொள்ள முடியாது. இந்தியா படித்த இதே பாடத்தை சிறிலங்கா இராணுவம் முல்லைத்தீவிலும் ஆனையிறவிலும் பாரிய இழப்புகளுக்குப் பின்னர் படித்துள்ளது என 1987 இல் தமிழீழத்தின்மீது இந்திய இராணுவ நடவடிக்கையின் போது 'பரா' இராணுவ துருப்புக்களுக்கு தலைமை வகித்த இராணுவ அதிகாரி அர்ஜீன் கடோஸ் கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது 1990 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் இந்திய இராணுவ தளபதி லெப். ஜெனரல் கல்கட் 1000 இந்திய இராணுவத்தினரை இழந்தும் பெரிய சாதனை புரிந்துவிட்டதாகவும் விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்து வவுனியா காட்டுக்குள் துரத்தி விட்டதாகவும் சிறிலங்கா இராணுவம் அவர்களை முற்றாக அழித்துவிடும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவம் ரஞ்சன் விஜயரட்ணாவின் அனுசரணையுடன் ஜே வி பி இயக்கத்தை அழித்ததும் ஆனால் அது யாழ் கோட்டையை இழந்தது மாங்குளத்தை இழந்தது. இந்திய ராணுவத்தினர் மூன்றுவருட காலத்தில் இழந்த தொகையைவிட கூடுதலான இராணுவத்தினரை ஆறு அல்லது ஏழு மாதகாலத்தில் இழந்தனர்.

தமிழர்களுக்கும்சிங்களவருக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் போர் நிலத்தைப் பற்றியது என்பது அநேகருக்குதெரியாது சிறிலங்கா அரசாங்கம் அந்த நாட்டிலுள்ள சகல நிலப்பரப்பும் அரசாங்கத்துக்குச் சொந்தமானதுஎனக்கூறிக்கொண்டு தமிழ் பிரதேசங்ளில் பெருமளவு பிரதேசத்தில் இராணுவத்தின் துணையுடன் சிங்களவரை குடியேற்றுகிறது. இக் குடியேற்றங்கள்மூலம்ஒன்றாக அமைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை துண்டாடும் மூயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்த செயலுக்கு எதிர்ப்புத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் விமான ஓட்டம் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

குடாநாட்டின் வான் பிராந்தியத்தில் நேற்று சிறிலங்கா விமானப் படையினரின் நடமாட்டம் அதிகமாகக் காணப் பட்டது

சிறிலங்கா விமானப்படையினரின் வை-8, வை-12 மற்றும் உலங்கு வானூர்திகள், சிறியரக குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவை காலை முதல் மாலை வரை அங்கும் இங்கும் ஓயாமல் ஓடிக்கொண்டிருந்தன.

காரைநகர் கடற்படைத் தளத்திற்கும்பலாலிஇராணுவ முகாமிற்கும் இடையில் சமநேர இடைவெளியில் பல தடவைகள் உலங்கு வானூர்திகள் சென்று வொண்டிருந்தன.

## நியமனத்தில் ஒழுங்கீனம்; விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

சில அரசாங்க நியமனங்கள் ஒழுங்கற்ற முறையிலும் விதிமுறைகளுக்கு முரணாகவும் வழங்கப்பட்டுள்ளதாக எழுந்திருக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்க ஒரு குழுவை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நியமனம் செய்துள்ளார்.

## வங்கிகள் வங்குரோத்து அடைந்திருப்பதுஉண்மையே

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாகியிருப்பது உண்மையே என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகள், வங்கி ஊழியர் சங்கத்தினர் போன்றோர் இது பற்றி பிரதமர் டி. பி விஜயதுங்க தெரிவித்த கருத்துக்களை மீளப் பெறும்படி வலியுறுத்தி வருகின்ற போதிலும், இது மறுக்க முடியாத உண்மையே எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## தீவக மக்கள் நலன்காக்கும் கழகச் செயலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாகவாழும் மக்களின் நலன்காக்கும் கழகத்தின் தலைமைச் செயலகம் இலக்கம் 65 புதிய வீதி அத்தியடியில் நேற்று 10 மணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாலர் பாடசாலைகளில் போஷாக்குணவு வழங்கல்

யாழ் குடாநாட்டில்போஷாக்கு நிலையில் ஏற்பட்டு வருகின்ற பாதிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசரமான நிலையில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் யாழ். மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள 100 பாலர் பாடசாலைகளுக்கு பால் அல்லது போஷாக்குணவு வழங்கும் திட்டம் ஒன்றை அடுத்த ஆறு மாதங்களுக்கு நடைமுறைப் படுத்தவுள்ளது.

இத்திட்டம்பின்தங்கியபகுதிகளில் தற்போது பாலர் பாடசாலைகளை நடத்திக்கொண்டுள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் உட்பட அடிமட்ட அமைப்புகளூடாக செயல்படுத்தப்படவுள்ளது.

பாலர் பாடசாலைகளின் செயற்பாட்டுக்கான செலவுகளையோ, போஷாக்குணவு தயாரிப்பதற்கான செலவினங்களையோ தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்க மாட்டாது.

இவ்வகையில்தங்களால் நடாத்தப்பட்டுவருகின்றபாலர் பாடசாலைகளில் பால் / போஷாக்குணவுவழங்கத்தயாராகஉள்ள அமைப்புக்கள் 10 ஆம் திகதிக்கு முன்னர் 83/2 காங்கேசன்துறைவீதிகொக்குவிலில்அமைந்துள்ள தமிழர்புனர்வாழ்வுக் கழகத்திற்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

உதவிகோரும்அமைப்புக்கள் கிராமிய அடிமட்ட அமைப்பாகஇருப்பதுடன் வேறு எந்த அமைப்புகளிடமோ, தனிநபர்களிடமோ போஷாக்குணவுக்கான உதவி பெறாதிருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் கிராமசேவகர், வட்டவைப் பொறுப்பாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது விரும்பத்தக்கது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ் இந்து ஞானவைரவர் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஸ்ரீஞானவயிரவர்சுவாமி 4வது ஆண்டு குடமுழுக்குதின சங்காபிஷேகம் சனி மாலை 5-00 மணிதொடக்கம்செவ்வாய்க்கிழமைகாலை 7-00 மணி வரை நடைபெற உள்ளது.

கல்லூரியின் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு இந்து இளைஞர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட

# சிறுமியின் சடலம் புதைகுழியிலிருந்து மீட்பு

(கொழும்பு)

நஞ்சூட்டிக் கொல்லப்பட்டு வீட்டு வளவுக்குள் புதைக்கப்பட்ட எட்டு வயதுச் சிறுமி யொருத்தியின் எலும்புக் கூட்டை சம்பவம் நடைபெற்று இரண்டு வருடங்களுக்கு பின்னர் அரகன்வில பொலிசார் அகழ்ந்தெடுத்துள்ளனர்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது சிறுமியின் தந்தை முதல்தாரம் மணம் முடித்து அவரைப் பிரிந்து மறுதாரம் மணம் முடித்திருந்தார்எனவும்இருந்தபோதிலும் இந்த எட்டு வயதுச் சிறுமி தந்தையுடன் வாழ்ந்து வந்தாரெனவும் ஒருநாள் சிறுமி திடீரென காணாமல்போகவே கணவனுக்கு முதல்தார மனைவி கூட்டிச் சென்றதாக இரண்டாம்தார மனைவி தெரிவித்திருந்தாராம்.

எனினும் இரு வருடங்களுக்கு பின்னர் முதல் தாரத்து மனைவி தனது மகளை காணவில்லை என கடந்த வாரம் அரகன்வில பொலீஸாருக்கு புகார் தெரிவித்ததாகவும்விசாரணையைநடாத்திய பொலீசாரே வீட்டுவளவுக்குள் சிறுமியின் எலும்புக் கூட்டைக் கண்டெடுத்தனர். மாற்றாந் தாயே இக் கொடூரத்தை புரிந்திருக்கலாம். என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவரைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர். மரணத்துக்கான காரணத்தை கண்டறிவதற்கான சிறுமியின் எலும்புக்கூடு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# கடத்தல் குறையவில்லை இடங்களே மாறியுள்ளன

## சுங்கப்பணிப்பாளர்

இந்தியாவிற்க்கும்சிறிலங்காவுக்குமிடையில் இடம்பெறும் கள்ளக் கடத்தல் குறையவில்லை. ஆனால் கள்ளக்கடத்தல் நடைபெறும் இடங்கள் தான் மாறியுள்ளன என்று சுங்கப் பணிப்பாளர் எல். ஏ. கூறீன்கம தெரிவித்தார், அண்மைக் காலங்களில்கடற்படை, பொலிஸ், சுங்கப் பகுதியினர் பிடித்த கடத்தல் வழக்குகளிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது என்றார் அவர்.

கொழும்பில் நடைபெற்ற இந்தியா - சிறிலங்காவுக்கிடையிலான பதினைந்தாவது இருதரப்புக் கூட்டத்தில் சுங்கப் பணிப்பாளர் இவ்வாறு கூறினார். இந்தியா சார்பில் சுங்கக் கலெக்டர் வி. கே, சர்மாவின் தலைமையில் ஒரு குழு கலந்து கொண்டது.

அவர் மேலும் பேசுகையில், வடபகுதிக் கடல் மூலமாக நடக்கும் கடத்தல் இப்போது குறைந்துள்ளது. அதற்கு இப்போதைய சூழ்நிலை காரணமாக இருக்கலாம். ஆனால் வடபகுதிக் கடத்தல்காரர் இப்போது தமது நடவடிக்கையை வட - மேற்குக் கடற் பகுதிக்கு மாற்றியுள்ளார்கள் என்றார்.

Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன்கருதி
தற்பொழுது
வவுனியா நகரில்
மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## வரட்சியினால்

# அசுத்த நீர் பருகியோர் மருத்துவமனையில் சிகிச்சை

(பதுளை)

வரட்சி காரணமாக அசுத்த நீரை பருகிய பலர் சுகவீனமுற்று மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

தோட்ட இறப்பர் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் அசுத் நீர்; ஆறு, ஓடைகளில் கலந்து மாசு படுத்தப்பட்ட நீரை அருந்தியதாலேயே வியாதிகள் ஏற்படுவதாகவும்,

பெரும்பாலும் சிறுபிள்ளைகளே இவ்வாறு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வாகன விபத்தில் வயோதிபர் படுகாயம்

## தலவாக்கலவில்

# தற்காலிக குடிசை அமைத்தமையால் வேலை வாய்ப்பை இழந்தனர்

(தலவாக்கல)

தோட்டத்தில் தற்காலிக குடிசைகள் அமைத்த தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வேலை வழங்க மறுத்துள்ளது. அத்துடன் ஏழு நாட்களுக்குள் தற்காலிக குடிசைகளை உடைத்து அப்புறப் படுத்தப்பட வேண்டுமெனவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தலவாக்கலபகுதியில்ஹொலிரூட் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சிலர் முகங்கொடுக்கும் இப்பிரச்சினை பற்றி மேலும் தெரியவருவதாவது,

இத்தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு லயன்களில் போதிய இட வசதி இல்லாதமையினால் சுமார் ஐம்பது தொழிலாளர்கள் தற்காலிக குடிசைகள் அமைத்திருப்பதாகவும்; பத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு கூட நிர்வாகம் இட வசதி செய்து கொடுக்கவில்லை எனவும் எனினும் இத்தகைய தற்காலிக குடியிருப்புக்களை உடனடியாக அகற்ற வேண்டுமென்று நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இத் தோட்டத்தின் காணிகளில் கிராமப் புறங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் அத்து மீறி குடியேறியுள்ளமைக்கு எதிராக நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தொழிற் சங்க வட்டாரங்கள் சுட்டிக் காட்டி கேள்வி எழுப்பியுள்ளன.

ஆனால் தோட்ட தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டமைக்கு வரட்சி நிலையே காரணம் எனவும், வரட்சியையடுத்து பல தோட்டங்களிலும் ஆட்குறைப்பு செய்யப்படுவதாகவும் நிர்வாகத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# அளவைகளுக்கு முத்திரையிடல்

யாழ் செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தினால் இன்று திங்கள், நாளை செவ்வாய் 9 ஆம் திகதி வியாழன் ஆகிய தினங்களிலும் கரவெட்டி மக்கள் வங்கிக்கு அருகாமையில் உள்ள கட்டடத்தில் நிறுவை அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறும்

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சகல வியாபாரிகளும் தத்தமது நிறுவை அளவை கருவிகளுக்கு (தராசுபடிகளுக்கு) தவறாது முத்திரையிட்டுக் கொள்ளும்படி யாழ்.செயலக நிறுவை அளவைகள் திணைக்களப்பரிசோதகர் திரு வை. கிருஸ்ணதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முத்திரையிடும் வேலைகள் காலை 8 30 மணி தொடக்கம் பி.ப 1 30 மணி வரை நடைபெறும் [24]

# நான்கு வடபகுதி இளைஞர் மாத்தளையில் கைது

மாத்தளை களுதாவளையில் நான்கு தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

மாத்தளை பொலிசார் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்.

கைது செய்யப்பட்டுள்ள நால்வரும் வடபகுதி இயக்கமொன்றுடன் தொடர்புடையவர்கள் என்றும் சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# மகாபொல ஏற்பாடுகளில் யாழ். மாணவர்புறக்கணிப்பு

(மாத்தளை)

மாத்தளையில் இடம்பெற்ற மகாபொல புலமைப்பரிசில் வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்ற யாழ் பல்கலைக் கழக மாணவர்களுக்கு உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாணவர்கள் மாத்தளை சிறிமுத்து மாரியம்மன் கோவில் தேவஸ்தானத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்ட போதும் அங்கு அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளே இருக்கவில்லை என்றும்,

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படாததால் உரிய நேரத்தில் உணவு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை மகாப்பொல வைபவத்தில் ஏனைய மாவட்ட மாணவர்களை விட யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களே அதிகமாகக் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியக் கொடுப்பனவில் புதிய நடைமுறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தும் நோக்கமாக ஏப்ரல் மாதம் முதல் புதிய முறை ஒன்று நடைமுறைப்படுத்தபபடவுள்ளது.

இதன் பிரகாரம் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுவோர் தாமே நேரடியாக வந்து மட்டக்களப்பு கச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியத்தைக் பெறவேண்டும். அவ்வாறு பெற முடியாதவர்கள் இன்னொருவர் மூலமாகப் பெறுவதாயின் ஓய்வூதியம் பெறுபரின் கையொப்பம் சம்பந்தப்பட்ட பிரிவு கிராமசேவை உத்தியோகத்தராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

இதற்கான படிவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகலஉதவிஅரசாங்க அதிபர்களுக்கும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்சுற்றுநிருபம் மூலமாக அறிவித்துள்ளார்.

# ராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள ஆலயங்களை விடுவிக்கவும்

## -- ஆதீனம் கோரிக்கை

சிறிலங்கா ராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து சைவத் திருத்தலங்களை விடுவிக்குமாறு மாவை ஆதீனமும், அகில இலங்கை சைவ மகா சபையும் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேற்படி இரு நிறுவனங்களும் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக பிரேமதாசாவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன. அம் மகஜரில்:

ராணுவத்தின் நேரடி கட்டுப் பாட்டின் கீழ் தற்போது இயங்கும் பகுதிகளில் உள்ள திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆகிய திருத்தலங்களுக்கு சைவ மக்கள் அன்றாடம்

# கொழும்பு நகரில் தேடுதல்; 25 தமிழ் இளைஞர்கள்கைது

(கொழும்பு)

கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் நடைபெறும் பொலிசாரின் வீதித்தடை சோதனைகளின் போது இருபத்தைந்துக்கும் அதிகமான தமிழிளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.வீதிகளிலும், பஸ்களில் பயணம் ... வினர்களுக்கும் தெரிய வருவதில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 155ம் இலக்க பஸ்வண்டியொன்று மாநகர அலுவலகத்தைக் கடந்துசென்றதும் வழிமறித்த பொலிசார் அதில்பயணம் செய்த பன்னிரண்டு தமி

மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது
புத்தாண்டை முன்னிட்டு 14% முதல் 25% வரை கழிவு உண்டு
பாட்டா மொத்த விற்பனை நிலையம்
இல. 35, மில்றோட், வவுனியா.
(2402)

## வாகன விபத்தில் வயோதிபர் படுகாயம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வாகன விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் சண்முகநாதன் என்பவரே படுகாயமடைந்தவராவார் உடல் முழுவதும் பலத்த காயங்களுக்குள்ளான இவர் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

ர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. வீதிகளிலும், பஸ்களில் பயணம் செய்கையிலும் இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்படுவதால் இவர்கள் பற்றிய விபரங்கள் உடனடியாக உற

ரைக் கடந்துசென்றதும் வழி மறித்த பொலிசார் அதில்பயணம் செய்த பன்னிரண்டு தமிழர்களையும் யாழ்ப்பாண அடையாள அட்டை வைத்திருந்தமைக்காக கைது செய்த பொலிசார் கறுவாக்காடு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

புரம் கந்தசாமி கோவில் ஆகிய திருத்தலங்களுக்கு சைவ மக்கள் அன்றாடம் சென்று அச்சமேதுமின்றி தங்களின் மதக் கடமைகளையும், தொண்டுகளையும் செய்வதற்கேதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

‘சஞ்சீவி’
புத்தாண்டு மலிவு விற்பனை
இல்லத்தரசிகளே!
மலரும் புத்தாண்டை
குதூகலமாக கொண்டாட வேண்டாமா?
உங்கள் இல்லங்களுக்கு தேவையான:
★ தையல் இயந்திரங்கள்
★ வீட்டுத்தளபாடங்கள்
போன்றவற்றை மலிவாக பெற்றுக்கொள்ள
இன்றே வாருங்கள்
‘சஞ்சீவி’
மரத்தளபாட விற்பனை நிலையம்
இல 31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்
(2419)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2 ஆம் லெப்டினன்ட் அன்ரனி

(துரைச்சாமி அகிலன்)

தாயவளின்சொத்து: 20. 6, 1972

தாயகத்தின்வித்து: 20. 3. 1991

திதி 06. 04. 1992

20. 3. 1991 அன்று சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமடைந்த 2 ஆம் லெப்டினன்ட் அன்ரனிக்கும் இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
பேரன், பேர்த்தி, சித்தப்பா, சித்தி,
மாமாமார், மாமிமார்.

கேணியடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

முள்ளானை,
இளவாலை.

(சி/4202)

## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தொண்டமானாற்றில், எமது காவல் அரண்மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2 ஆம் லெப். சின்னக்கோபு** (செந்திவடிவேல் சிறிதரன்-வல்வெட்டித்துறை)

**2 ஆம் லெப் பட்டாபி** (செந்திவடிவேல் சாந்தகுமார்- நெல்லியடி)

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அன்ரன்/ரஞ்சன்** (அருச்சுனன், ரஞ்சன் -யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப்பகுதியில் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் ஒன்றின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். கமல்** (கந்தையா கமலேஸ்வரன் -பழம்பாசி, நெடுங்கேணி, மணலாறு)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈரலிக்குளத்தைச் சேர்ந்த தமிழ் விவசாயி-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-4226)

**சிந்தனைக்கு**

தொலைவில் இருக்கும் வசதிக்காக அருகிலிருக்கும் கடமையை நீ புறக்கணிக்கக் கூடாது.

— மகாத்மா காந்தி


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 06-04-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308


## அடிமைச் சேவகத்தில் சுகம் காணும் கூட்டம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய பத்து மருத்துவ அதிகாரிகள் சுய விருப்பின் பேரில் தென்னிலங்கைக்கு மாற்றலாகிச் செல்வதாகவும், அவர்கள் இடமாற்றக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு விட்டதாகவும் தெரியவருகின்றது ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து ஓடும் முதல் தொகுதி டாக்டர்கள் அல்ல இவர்கள்

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் சுகாதார சேவை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான யுத்தமும், வடக்கின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையும் இதற்கு முக்கியமான காரணங்களாகவுள்ளன. யுத்தமும், பொருளாதாரத்தடையும் பல்வேறு விதத்தில் அதாவது போசாக்கின்மையில் இருந்து கழிவுப் பொருள் அகற்றும்வேலை வரைபெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, மருந்துப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு, மருத்துவ வசதிகள் இன்மை போன்றவற்றால் நோயாளர் போதிய வைத்திய வசதிகள் பெற முடியாத நிலையும், அதனால் அவல மரணங்களும், துன்பங்களும் ஏற்பட்டும் வருகின்றன. ஆனால் இவையாவும் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கையால் அதாவது இன அழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவுள்ளது. இந்நிலையில் இவை குறித்து தமிழர் ஆத்திரங்கொள்ள முடியுமே ஒழிய கவலைப்பட்டுப் பிரயோசனம் எதுவும் ஏற்படப் போவதில்லை

ஆனால், யாழ். மாவட்டத்தின் மருத்துவ தேவை பின்னடைவுக்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக வைத்தியர்கள் பற்றாக் குறையாக இருப்பது தமிழரைப் பொறுத்து அவமானகரமானதும், வெடகப்பட வேண்டியதுமாகும். இலங்கையில் அதிக டாக்டர்களை உற்பத்தி செய்த, செய்கின்ற முதன்மையான மாவட்டங்களில் யாழ் மாவட்டமும் ஒன்று. தென்னிலங்கையில் எங்கோ ஒரு மூலையில இருந்து ஆபிரிக்காவின் கொங்கோ காடுகள், சகாராப் பாலைவனம் வரை யாழ். டாக்டர்கள் பணத்திற்காக வைத்தியம் - சேவையல்ல - செய்கின்றார்கள். அவர்கள் தமது சொந்த மண்ணில் தமது தாயகத்திற்குச் சேவை செய்யத்தயாராக இல்லை.

தமிழீழப் போராட்டத்தை விரைவுபடுத்திய காரணிகளில் ஒன்று பல்கலைக்கழகத்தில் தரப்படுத்தலை சிங்கள அரசாங்கம் அறிமுகப்படுத்தியமையாகும். அதிலும் வைத்திய, பொறியியல் துறைகளில் தமிழ் மாணவர் தெரிவில் ஏற்பட்ட பெரும் வெட்

# இந்தியாவின் இரட்டை வேட அணுகுமுறை

# பர்மாவில் ஆட்சியாளருக்கு துணைபோகிறது

(நேற்றைய தொடர்ச்சி)

அகதிகளின் கதைகளைக் கேட்டு கண்ணீர் விடாதவர்கள் யாருமில்லை. தனது கண்முன்னே தனது மகளையும், மனைவியையும் இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கினார்கள் என்கின்றார் எல்லைப்புறநகரமான ரெச்நாவ் என்ற இடத்தில் இருந்து அகதியாக வந்த 45 வயதான அமிர் குசேன். இது மாத்திரமின்றி எனது 16வயது மகனைத் தங்கள் முகாமுக்குக் கொண்டு சென்றனர். அவன் திரும்பி வரவேயில்லை என்று அவர் மேலும் கூறினார் இப்படிப்பட்ட சம்பவங்களை முஸ்லிம் பெண்களும் கூறுகின்றனர். பர்மிய இராணுவத்தினர் எட்டுப் பண்டகசாலைகளில் 2000 றொகின்யா முஸ்லிம் இளைஞர்களை அடைத்து வைத்தபோது 700பேர் மூச்சுத் திணறி இறந்துள்ளனர் என்று பங்களாதேச செய்தித்தாள் ஒன்று தெரிவிக்கின்றது.

இந்த வன்செயல்கள் காரணமாக பர்மிய - பங்களாதேச உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதுடன், டாக்காவையும் இது குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. உலகில் அகதிகளாலும், மக்கள் தொகையாலும், வறுமையினாலும் அல்லலுற்றிருக்கும் பங்களாதேசம் இந்த அதிகளவிலான அகதிகளை வைத்துப் பேணமுடியாமல் திணறுகின்றது. 1978 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுகளினால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் தொகையினரிலும் பார்க்க இடபொழுது பர்மாவிலிருந்து வரும்அகதிகளின் தொகை அதிகரிக்கும் போல் தோன்றுகின்றது. முன்னர் பங்களாதேசத்தில் அகதியாக இருந்து ஒரு ஆண்டின் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டவர் குசேன். "இநத முறை என்னைத் திருப்பி அனுப்பமுற்பட்டால், நான் இங்குபட்டினியால் சாகநேரிட்டாலும் அங்கு சென்றுசாபபொறியில்விழத் தயாரில்லை." என்கிறார் அவர். திரும்பி வரும் தனது பிரசைகளை ஏற்கத்தயார் என்றுகூறும் பர்மிய அரசாங்கம், அதேவேளை நாட்டைவிட்டு வெளியேறும் முஸ்லிம் மக்களின் அடையாள அட்டைகளைப் பறித்து அவர்கள் திரும்பிவந்து தமது குடியுரிமையை உறுதிப்படுத்த முடியாத நிலையை உருவாக்குகின்றது.

இந்த அகதிகள் நாடற்ற நாடோடிகளா? டாக்கா நினைப்பது மாதிரி நடந்தால் அப்படி நேரமாட்டாது. அகதிகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களைத் திருப்பி அனுப்ப மாட்டோம் என்கிறார் பங்களாதேச வெளியுறவு அமைச்சர்மொஸ்தாபிஆர்.ரகுமான், ஆனால் இது நீண்டகாலப் பிரச்சினையாக உருவாகிவிடும் என்ற காரணத்தால் ஐக்கிய நாடுகள் சபை அகதி முகாம்களை அமைப்பதைத் தடுத்துள்ளது. இதனால் அநேகமான அகதிகள் பாதுகாப்பற்ற வெட்டவெளியில் இருப்பதால் அவர்கள் பஞ்சம், பசி பட்டினி, குளிர் ஆகியவற்றால் இறக்க நேரிடுகின்றது.

பர்மாவின் வடமேற்கில் வசிக்கும் நாகா இனப் பழங்குடி மக்களும் இப்படி ஈவிரக்கமின்றி துன்புறுத்தப்படுகின்றனர். இதுவரை காலம் ஏறத்தாழ 500 பேரைக்கொண்ட நாகா கிளர்ச்சியாளர்களை தங்கள் மலைப் பிரதேசத்தில் செயல்படப் பார்த்துக் கொண்டு அக்கறை இல்லாமல் பர்மிய இராணுவம் இருந்தது. இந்தநாகாக்கள் இங்கிருந்து கொண்டு இந்திய இராணுவத்தினருக்கெதிராக நாகலாந்தில் தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் ஆனால் கடந்தடிசெம்பர் மாதத்தில் இரு பெரும் பர்மிப் படைப்பிரிவு துவக்குகள் பூட்டிய உலங்கு வானூர்தி சகிதம் மலைச்சரிவுகளில் தனது நடவடிக்கையை முடுக்கிவிட்டது. இந்நடவடிக்கையின் போது நாகா கிளர்ச்சியாளர்களின் இருமுகாம்களைக் கைப்பற்றியதோடு அவர்களின் தலைமையகமான லோங்காய்மீது எறிகணைத் தாக்குதல்களையும் நடத்தியது. ஜனவரி 31-ம் திகதி லோங்காயைக் கைப்பற்றியதோடல்லாமல் நாகாக்கிளர்ச்சியாளர்களின் அரசியல் தலைமையகமான சியாங் நோக்னு (Chiang Noknu) வை இறுதியாகத் தாக்கத் தொடங்கியுள்ளது.

இந்நடவடிக்கைகள் வடக்கிலுள்ள பலம் வாய்ந்த கச்சின் (Kachin) புரட்சி இராணுவத்துடன் மோதுவதற்கு எடுக்கப்பட்டதென இந்திய இராணுவ அதிகாரிகள் நம்புகின்றனர். இந்நடவடிக்கை மூலம் இரத்தினக்கல். காட்டுமரங்கள் அடக்கிய பிரதேசங்களைத் தங்கள் கைவசம் கொண்டு வர பர்மிய இராணுவம் நினைக்கின்றது. பர்மிய இராணுவத்தினர் அரகனில் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற செயல்களைப் போல் இங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்படிப்பட்ட சம்பவங்களையே நாகா அகதிகளும் கூறுகின்றனர்.

எல்லாப் பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வது இராணுவ ரீதியில் நல்ல பலனை அளிக்காது. ஆனால் இப்படி நடவடிக்கை எடுப்பதனால் வெவ்

மூது பர்மாவில் அதிருப்தி அதிகமாக நிலவுகின்றது என்கிறார் புதுவில்லியில் வசிக்கும் சனநாயகவாதியும் அகதியுமான ரின் சுவே என்பவர். இந்திய அரசாங்கம் இது விடயத்தில் கவலையடைந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பர்மிய நடவடிக்கையினால் அசாம் (Assam) கிளர்ச்சியாளர்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் நாகாக்களிடம் இருந்து கிடைப்பது தடைப்பட்டுள்ளன என்று வடகிழக்கிலுள்ள இந்திய இராணுவத் தளபதிகள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இந்தியாவின் இப்படிப்பட்ட இரட்டை வேடம் பர்மாவின் ஆட்சியாளர்களுக்கு உதவுவதோடு பர்மிய மக்களின் நிலையை கவலைக்கிடமாக்கு

**ஜேம்ஸ் வால்ஷ்**

யுள்ளது: சூ கீயின் ஆதரவாளர்கள் தார்மிக ஆதரவாளர்கள் தார்மீக ஆதரவு மூலம் சனநாயகத்தைக் கொண்டுவர உத்தேசிக்கின்றனர். இராணுவ ஆட்சியாளர்களின் தடை காரணமாக 1990-ம் ஆண்டு தங்களுக்குக் கிடைத்த சனநாயக ரீதியான வெற்றியை அனுபவிக்க முடியாத

> கடந்த டிசம்பர் மாதம் முதல் சுமார் ஒரு லட்சத்து எழுபத்தையாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் அகதிகளாக பர்மாவிலிருந்து பங்களாதேசுக்குள் புகுந்துள்ளனர். முஸ்லிம் சிறுபான்மையினர் மீது இராணுவ ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்திருக்கும் வன்முறைகளே இந்த அகதிகள் வெளியேற்றத்திக்கு காரணமாகும்.
>
> ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஆன்-சாங்சூபியை வீட்டுக்காவலில் தொடர்ந்து தடுத்து வைத்திருக்கும் பர்மிய இராணுவ அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளால் அயல் நாடுகளுடனும் முறுகல் நிலை தோன்றியுள்ளது.
>
> இந்நிலையில் பர்மாவின் நிலைமைகள் குறித்து 'டைம்ஸ்' இதழில் வெளியான கட்டுரையின் மொழி ஆக்கத்தின் ஒரு பகுதி இது.




லேசர் ரக போர் விமான தயாரிப்பு

## அமெரிக்க உற்பத்தியாளர்களுக்கு இந்தியா அழைப்பு

(லண்டன்)

லேசர் ரக போர் விமானத் தயாரிப்பில் கூட்டு முயற்சிக்காக அமெரிக்கப் பாதுகாப்பு சாதன உற்பத்தியாளர்களுக்கு இந்தியா அழைப்பு விடவுள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் இதனைத் தெரிவித்தார்.

கடந்த மூன்றாண்டுகளில். அமெரிக்காவிற்கு விஜயம்செய்யும் முதலாவது இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தங்கியிருக்கும் போது அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சர் டிக் ஸ்ஜெனி மற்றும் பாதுகாப்பு துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

இந்திய விமானப்படையினர் பெருமளவிற்கு மிக் மற்றும் மிராஜ் ரக விமானங்களிலேயே தங்கியிருந்தனர் என்பதும் சோவியத்தின் சீர்குலை

தலை சிங்கள அரசாங்கம் அறிமுகப்படுத்தியமையாகும். அதிலும் வைத்திய, பொறியியல் துறைகளில் தமிழ் மாணவர் தெரிவில் ஏற்பட்ட பெரும் வெட்டாகும். இதனால், போராட்டம் கூர்மையடைந்தது பல்கலைக்கழகத் தெரிவிலும் சிறு தளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால், இந்நெருக்கடிகளுக்கு ஊடாக பல்கலைக்கழகம் சென்ற டாக்டர்கள்கூட இடபொழுது தமது மண்ணிற்காகச் சேவை செய்யத் தயாராக இல்லை அதாவது மாணவரின் உரிமைக்காகப் போராடிய மக்களுக்கு சேவை செய்ய அவர்கள் தயாராக இல்லை. நண்பர் ஒருவர் கூறியது போன்று, பல்கலைக்கழகத்திற்கு கூடுதல் அனுமதி வேண்டும் என போராடியவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியில் நின்றவர்களே ஒழிய பல்கலைக்கழகம் சென்றவர்கள் அல்ல தற்பொழுது இதுவே சரியானது, நிதர்சனமானது என உள்ளவர்கள் வெளிக்காட்டி வருகின்றார்கள்.

இவர்கள் தாயக மண்ணை விட்டு ஏன் ஓடுகிறார்கள்? தமது மக்களுக்குச் சேவை செய்ய ஏன் மறுக்கின்றார்கள்? இங்கு நிலவும் யுத்தச் சூழலும், நெருக்கடியும் தமது சுகமான வாழ்க்கையை பாதிக்கின்றது என்பதை விட வேறு எதுவும் காரணமில்லை. அவர்கள் அடிமைச்சேவகம் எனினும், சுகமான வாழ்க்கை வாழ வேண்டும் என எண்ணுகிறார்கள்.

ஆனால், இவர்கள் அனைவரும், 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் தமது கீழ் உள்ள ஊழியர்களினாலேயே தாக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டதையும், சிலர் கொல்லப்பட்டதையும் மறந்து விட்டார்களா? அல்லது இனிமேல் அவ்வாறானதொரு சூழ்நிலை உருவாகாது எனக் கருதுகிறார்களா? அல்லது எதுவாக இருந்தாலும் பணமும் சுகமுமே தேவை எனக் கருதுகின்றார்களா?


ஆனால் இவர்கள் அனைவரும் ஒன்றை மறந்து விடக் கூடாது இந்த மண் அவர்களுக்குக் கடமைப்பட்டது அல்ல. இம் மண்ணிற்கும் மக்களுக்கும் அவர்கள்தான் கடமைப்பட்டவர்கள். இந்த மண்ணின் வளத்திலேயே அவர்கள் கற்றார்கள். இந்த மண்ணே அவர்களுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்பைக் கொடுத்தது, வசதியை வழங்கியது. இந்த மக்களின் வரிப்பணத்திலும், இந்த மக்களின் ஒதுக்கீடுகளிலும் இருந்தே தமது கல்விக்கான வாய்ப்பை உருவாக்கிக் கொண்டார்கள். மேலும் இந்த மக்களாலேயே இவர்கள் பயிற்சியும் பெற்றார்கள். ஒருவர் எண்ணக் கூடாது எனது முயற்சியினால் மட்டும் நான் டாக்டர் ஆகினேன் என்று. அவரது முயற்சிக்கு மேலாக இந்த மண்ணும், மக்களும் வழங்கிய வாய்ப்பே இவரை டாக்டர் ஆக்கியது என்பதை மறந்து விடக் கூடாது ஆனால், இந்த மண்ணும், மக்களும் தற்பொழுது கவலைப்படுவது இவ்வளவு வாய்ப்பு வசதிகளையும் வழங்கி அடிமை வாழ்வு வாழவும், அன்னியருக்குச் சேவகம் செய்யவும் ஒரு கூட்டத்தினரை உருவாக்கி விட்டுள்ளோமே என்பதற்குத்தான்.

இந்தியா அழைப்பு விடவுள்ளது.

அமெரிக்கா செல்லும் வழியில் லண்டனில் நேற்று முன்தினம் செய்தியாளரிடம் ...யும் முதலாவது இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. பவார் அமெரிக்காவில் ...லேயே தங்கியிருந்தனர் என்பதும் சோவியத்தின் சீர்குலைவுக்கு பின்னால் மிக் ரக விமானங்களில் தங்கியிருக்க முடியாத நிலையும் பிரான்ஸ் தயாரிப்பான மிராஜ் ரக விமானங்களின் பிந்திய தயாரிப்புக்கள் பாகிஸ்தான் கொள்வனவு செய்திருப்பதும் தெரிந்ததே.

இதனால் அமெரிக்காவின் எவ்-16 ரக விமானங்கள் மற்றும் அமெரிக்க போர் விமானங்களைப்பெற இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதே.




வேறு பகுதிகளிலுள்ள இராணுவத் தளபதிகளை சுறுசுறுப்பாக இயங்கச் செய்யலாம் என்று எண்ணுகின்றனர். அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவிலிருந்தும் இந்நடவடிக்கைகள் மூலம் இராணுவத் தளபதிகளின் கவனத்தைத் திசைதிருடபலாம். தற்பொ...வர்களுக்கு தார்மீக ஆதரவு மட்டும் போதாது. மானெப்புனோ பர்மிய இராணுவ ஆட்சியாளரின் கைகளில் வீழ்ச்சியடைந்தால் சூகி அவர்களின் நாடுகடந்த அரசாங்கமும் மறைந்துவிடும். இது உலகத்தின் கவனத்தை ஈர்க்காமலேயே நடந்துவிடக் கூடும். (முற்றும்)

முன்னாள் சோவியத்தின்

# கடற்படை அணி உரிமை; ரஷ்யா- உக்ரைன் முரண்பாடு

[டில்லி]

கருங்கடல் பகுதியில் நிலை கொண்டிருக்கும் முன்னாள் சோவியத்தின் கடற்படை அணிக்கு உரிமை கோருவதில் ரஷ்யாவும் உக்ரையினும் முரண்பட்டுக் கொண்டுள்ளன.

இக்கடற்படை அணியை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் முயல்வதன் மூலம் தமது நாட்டைப் பகைத்துக்கொள்ளவே முயல்கிறார் என்று உக்ரையின் அதிபர் லியோனிட் கிராங்சுக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தப் பிரச்சினை பற்றி உக்ரையினை அச்சுறுத்த முயலுவதால் எந்தப்பயனும் ஏற்படப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சார்க் பிரதிநிதிகள்

# பொது அறிக்கை தயாரிக்க கல்கத்தாவில் ஒன்று கூடல்

(கல்கத்தா)

ஐ நா சபையின் ஆதரவில் வரும் யூன் மாதத்தில் பிரேசிலில் நடைபெறவிருக்கும் உலா சுற்றுச் சூழல் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கான பொது அறிக்கையைத் தயாரிப்பதற்காக சார்க் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கல்கத்தாவில் கூடியுள்ளனர்.

சார்க் நாடுகளைச் சேர்ந்த இருபதிணைந்து பிரதிநிதிகளும், விரிவான ஒத்துழைப்பு நடவடிக்கை, புது அணுகுமுறை, புதுமுயற்சிகள், சுற்றுச் சூழல் நடவடிக்கைகள் என்பன குறித்து இவ் அறிக்கையில் விபரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஐ.நா.அமைதிகாக்கும் படை குரோஷியா சென்றது

(பெல்கிரட்)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படைப் பிரிவின் முதலாவது தொகுதி நேற்று முன்தினம் குரோஷியாவிற்கு சென்றடைந்தது எனினும் புதிய சண்டைகள் தொடர்ந்து நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை ஐரோப்பாவில் மேற்கொண்ட முதலாவது அமைதிகாப்பு நடவடிக்கை இதுவேயாகும் செர்பியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட குரோசியப்பகுதியில் சுமார் பதின்னாலாயிரம் பேரைக் கொண்ட ஐ நா அமைதிப் படை அமைதியை ஏற்படுத்த முயலும்.

கடந்த ஒன்பது மாதகாலமாக இங்கு நடைபெற்றுவரும் யூகோசெலவாக்கியாவின் உள்நாட்டுப்போரில் சுமார் ஆறாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் சுமார் ஒன்பதாயிரத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# அரபு லீக் கூட்டம்

(கெய்ரோ)

லிபியப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரபு லீக வெளியுறவு அமைச்சர் நாளை கெய்ரோவில் கூடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சுவீடன் ஆயுதக் கிடங்கில் துப்பாக்கிகள் கொள்ளை

சுவீடன் ராணுவ ஆயுதக் கிடங்கொன்றில் இருந்து இருநூறுக்கும் அதிகமான துப்பாக்கிகளும், இயந்திரத் துப்பாக்கிகளும் களவாடப்பட்டுள்ளன என்று சுவீடன் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இருபது வருட காலத்திற்கிடையில் நடைபெற்ற பெரும் திருட்டு இதுவெனவும்.

திருடப்பட்ட துப்பாக்கிகள் சர்வதேசச் சந்தைக்கு கொண்டு செல்லப்படலாம் என்றும் சுவீடன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தெரிவு

பஞ்சாப் மாநிலத்திலிருந்து ராஜ்பசபாவுக்கான ஐந்து இடங்களுக்கு காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பர்வீர்சிங், தர்வீர்சிங்தர், வினோத்சர்மா சுரீந்தர் சிங்லே, இக்பால்சிங் ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

# பொரு. தடைக்கு எதிராக தக்க பதிலடி கிடைக்கும்

## -- லிபியா எச்சரிக்கை

(திரிப்போலி)

ஐ.நா. பாதுகாப்புச்சபை லிபியாவிற்கு எதிராக பொருளாதாரத்தடையை விதித்தால் அதற்கு லிபியா தகுந்த பதிலடி கொடுக்கும் என அந்நாடு எச்சரிக்கை செய்துள்ளது.

ஐரோப்பாவிற்குபெற்றோல் ஏற்றுமதி செய்யப்படுதை தங்களால் தடுத்து நிறுத்த முடியும் என திரிப்போலியிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதர்களிடம் லிபியா இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை எந்த நிலையிலும் இரு லிபியர்களையும் அமெரிக்காவிடமோ அல்லது பிரான்சிடமோ லிபியா ஒப்படைக்காது என லிபியத் தலைவர் கேணல் கடாபி தெரிவித்துள்ளார் லிபியா மற்றொரு ஈராக் ஆக மாறமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்

அத்துடன் திரிப்போலியிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டு வருவதையடுத்து தூதரகங்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளனமுன்னதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் வெனின்சுலா ரஷ்சியா தூதுரகங்கள் மீது தாக்குதலை நடாத்தி பெரும் சேதத்தை விளைவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# பிரதி அதிபர் நியமனம்; பாடசாலையில் பூசல்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் மகளிர் கல்லூரி பிரதி அதிபர் நியமனத்தில் கல்விப் பணிப்பாளரின் முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கையினால் அக்கல்லூரியில் பூசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது: மேற்கூறிய கல்லூரியில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் வி. சபாநாயகத்தினால் திருமதி ப. பராஜசிங்கம் பிரதி அதிபராகவும், திருமதி சிவப்பிரகாசம் பிள்ளை இணை-பிரதி அதிபராகவும் 88-9-14 இல் நியமிக்கப்பட்டார்கள்.

★ மேற்கூறிய இருவரும் 1990-10-16 இல் இருந்து கல்லூரியில் இணை-பிரதி அதிபராகக் கடமைபுரிய வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கத்தினால் பணிக்கப்பட்டார்கள்.

★ இப்பணிப்புரையில் இராமநாதன் கல்லூரியில் ஒரு பிரதி அதிபர் மாத்திரமே கடமையாற்ற முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமதி சிவப்பிரகாசம் பிள்ளை இணைப்பாறியதும் அவருக்குப் பின்னர் இக்கல்லூரியில் ஒரு பிரதி அதிபரை மட்டுமே நியமிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ 1990-11-8 இல் யாழ் கல்விப் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இணை-பிரதி அதிபராகக் கடமையாற்றும் திருமதி அ. சிவப்பிரகாசபிள்ளையிடம் முதுமுறை அடிப்படையில் பொறுப்பைக் கையளிக்க நடவடிக்கை எடுக்கும்படி அதிபருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் விரைவில் முதலாம்தர அதிபர் ஒருவரைப் பிரதி அதிபராக்கு வதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அதிபர் திருமதி பராஜசிங்கம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது.

★ திருமதி சிவப்பிரகாசம் பிள்ளை ஓய்வுபெறுமுன் ஏப்பிரல் 91 இல் தரம் இரண்டு அதிபர் திருமதி சு. துரைராஜா இக்கல்லூரியின் மேலதிக பிரதி அதிபராக யாழ். கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டார்.

★ மேலும் 91-7-18 எனத் திகதியிடப்பட்ட கல்விப் பணிப்பாளரின் கடிதம் ஒன்றின்படி திருமதி கோ. கைலாசநாதன் 91-7-10 இல் இருந்து பிரதி அதிபராக இக்கல்லூரியில் நியமிக்கப்பட்டார். இதில் விசேஷம் என்னவென்றால் இக் கடிதம் 92-2-28 இல் கல்லூரியில் கிடைக்கப்பெற்றுள்ளது. கல்விப் பணிப்பாளரின் 1990-10-16 கடிதத்திற்கமைய ஒரு பிரதி அதிபர் மட்டுமே இராமநாதன் கல்லூரியில் பணியாற்ற முடியுமானால் பிரதிஅதிபரும், மேலதிக பிரதி அதிபரும் இருக்கும் போது மூன்றாவது பிரதி அதிபர் நியமனம் ஏன் என்று இக் கல்லூரி ஆசிரியர் வட்டத்தில் பேசப்படுகிறது.

இது தொடர்பான முறைப்பாடுகள் மாகாண அமைச்சுக்கும், மத்திய கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் 90-8-11 யாழ். பணிப்பாளரின் கடிதத்தில் கூறியபடி பதவி உயர்வு பெற்ற 1 ஆம் தர அதிபர் ஒருவர் தனிப் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டாரா, இல்லையா என்று வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கேள்வி எழுப்பியுள்ளது.

## உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ் விளையாட்டு நிருபர்)

அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் இடம் பெற்ற உதைபந்தாட்ட போட்டிகளில் முதலாவது ஆட்டத்தில் தொடர்மாடி விளையாட்டுக் கழக அணியை கொக்குவில் பொற்பதி அணி 3-0 கோல் கணக்கில்

## குருமார்கள் விஜயங்கள் தீர்வைக் கொண்டு வராது

(கொழும்பு)

பல்வேறு சமய குரவர்களின் குழுக்கள் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்வது இனப் பிரச்சினைக்கான தீர்வுகளைத் தேடித்தராது என்றும் இது வெறும் பிரசார உத்தியாகவே அமையும் என்றும். புளொட் இயக்கத்தின் தலைவர் டி. சித்தார்த்தன் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

### நூல் அறிமுக விழா

## யாழ். சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்'' என்னும் நூல் அறிமுக விழாவும் ஆய்வரங்கமும் நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மாலை 4.30 மணியளவில் ஆரம்பமான இவ் விழாவிற்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி

## சிறிமாவோ

### பல்கலைக்கழகத்தில் வழிகாட்டல் பயிற்சிநெறி

முதல் கலை, முதல் வர்த்தக வெளிவாரிமாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சி நெறி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. இத்தகவலை வெளிவாரிப்பட்டப் படிப்பு இணைப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சிநெறி ஏப்ரல் மாதம் 20ம் திகதி தொடக்கம் 30 ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## பலாலி இராணுவ முகாமில் அமைச்சர் ரேணுகா

(யாழ்ப்பாணம்)

சுகாதாரம் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் நேற்றுப் பலாலி இராணுவ முகாமுக்குச் சென்று காயமடைந்த இராணுவத்தினரைப் பார்வையிட்டார்.

கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, வடபிரதேசத் தளபதி இளான்னி பெர்னாண்டோ, வடபகுதி இராணுவ பொறுப்பதிகாரி பிரிகேடியர் விமல ரெட்ணா மற்றும் சுகாதார அமைச்சு அதிகாரிகள் உட்பட தீவகப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி திலக ரெட்ணாவும் அமைச்சரின் குழுவில் இடம் பெற்றனர்.

அமைச்சர் ரேணுகா ஹேரத் ஊர்காவல்துறை ஆஸ்பத்திரியையும் திறந்து வைத்தார். அதேவேளை, மார்பு நோய் வைத்திய நிபுணர் அத்துக்கோறளை ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் ஒரு நாள் வைத்திய நிலையம் ஒன்றினையும் நடத்தினார் என லங்காபுவத் தெரிவித்தது.

## இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பி.ப.3. 00மணிக்கு நடைபெறவுள்ளது .யாழ். வைக்கில்ஸ் அணியைஎதிர்த்துயாழ்.பாரதி அணிவலிகாமம்மேற்கு பிரிவுக்கான போட்டியில் மோதவுள்ளது.

வடமராட்சிப் பிரிவுக்கான மற்றுமொரு போட்டியில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பி. ப. 3 00 மணிக்கு இப் போட்டி நடைபெறவுள்ளது.

## தென்னிலங்கை

நிர்ப்பந்தமான பதவி ஓய்வுக்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

போதை வஸ்து, கள்ளக் கடத்தல் மற்றும் காடையர்கள் நடவடிக்கை பற்றிப் புலனாய்வு நடத்திய விசேட குழுவுக்குத் தான் பொறுப்பாக இருந்தபோது, பொலிஸ்

# ரூபவாகினி ஆங்கில செய்தி மதச்சின்னங்களுக்கு தடை

## தகவல் இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

ரூபவாஹினியில் ஆங்கிலச் செய்தி வாசிப்போர் பொட்டு, சிலுவை, தொப்பி எதையும் செய்தியின் போது அணியக்கூடாதென கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் வாசிக்கப்படும் செய்தியை சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் அனைவரும் பார்வையிடுகின்றனர். எனவே அதை வாசிப்போரும் பொதுவான தோற்றத்திலேயே காணப்பட வேண்டும். இது தொடர்பான ஒழுக்கக்கோவை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் அமுலில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மதச்சின்னங்கள் எதனையும் அணிந்துகொண்டு செய்தி வாசிப்பதை அனுமதித்தால் பெரும் பிரச்சினை ஏற்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

செய்தி வாசிக்கும் பெண் அறிவிப்பாளர்கள் சேலை அணிந்திருக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்தபோது, இந்திய பாணியிலா? அல்லது கண்டிய பாணியிலா என நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இது தொடர்பாகபத்திரிகையாளருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் இடையே சூடான விவாதம் இடம் பெற்றதைத்தொடர்ந்து செய்தியாளர் மாநாட்டிலிருந்து இடையிலேயே அமைச்சர் வெளியேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

## நீண்டதூர சேவைக்கு புதிய விமானம் அறிமுகம்

(பாரிஸ்)

பிரான்சில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நீண்ட தூரம் செல்லக்கூடிய ஏ 340-200ரக விமானமொன்று புதன் கிழமை அதன் முதல் பயணத்தை ஆரம்பித்தது.

8,750 மைல் தூரம் வரை செல்லக்கூடிய இந்த விமானத்தில் ஒரு தடவையில் 262 பேர் பயணம் செய்ய முடியும் என்றும்.

ஐரோப்பாவிலிருந்து அவுஸ்திரேலியா செல்ல இடையில் எண்ணெய் நிரப்பாமலே இது செல்லும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈரானிய யுத்தவிமானம் ஈராக்கினால் சுடப்பட்டது

(பாக்தாத்)

ஈரானிய யுத்த விமானமொன்றை ஈராக்சுட்டு வீழ்த்தியுள்ளது. மொத்தம் எட்டு ஈரானிய யுத்த விமானங்கள் தனது வான் பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்ததாகவும் அதில் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ஈராக் அறிவித்துள்ளது. அதிலிருந்த இரண்டு விமானப்படை வீரர்களும் கைது செய்யப்பட்டதாகவும் ஈராக் மேலும் தெரிவித்துள்ளது.

## லிபிய ஜனாதிபதியை அவமதிக்க வேண்டாம்

### வத்திக்கான் கோரிக்கை

லிபிய ஜனாதிபதி கடாபியை அவமானப்படுத்தும் எந்தக் காரியத்தையும் மேற்கத்திய நாடுகள் செய்ய வேண்டாம் எனக் கத்தோலிக்க கிறிஸ்தவ பீடத்தின் உயர் ஸ்தாபனமான வத்திக்கான் கேட்டிருக்கிறது.

இதேவேளை ஐ. நா. பாதுகாப்புச்சபை லிபியாவுக்கு விதித்த தடையை எதிர்த்து வரும் அரபுலீக் நாடுகள் நாளை கூடுகின்றன. ஏப்ரல் 15ஆம் திகதி முதல் லிபியாவுக்கு எதிரான தடைகள் அமுலுக்கு வருவதால் அரபு லீக் அதற்கு முன்பாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தமிழ் நாட்டுக் கல்லூரிகளில்

## கற்கை நெறியை பூர்த்தி செய்ய அனுமதி

(சென்னை)

தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் கல்வி பயிலும் இலங்கை ... கப்படுகிறது. ஆனால் இலங்கை மாணவர்கள் தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் புதிதா

## வென்சார்க்கார் ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள்கப்டன் வென்சார்க்சார் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருக்கிறார். இவருக்கு வயது 35.

சமீபகாலமாக உலக கிரிக்கெட் ஆட்டங்களில் கலந்து கொள்ள இந்திய கிரிக்கெட் கழகம் வென்சர்க்காரை தெரிவு செய்யவில்லை என்பதால் அவர் அந்த முடிவை மேற்கொண்டிருக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது.

கவாஸ்கருக்கு அடுத்தபடி 105 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்ட வென்சார்க்கார் 6495 ஓட்டங்களைக் குவித்தவர். அவர் 166ஓட்டங்கள் எடுத்தது அவரின் அதிகபட்ச ஓட்டங்கள். 44 ஓட்டங்கள் வென்சார்க்காரின் சராசரி ஓட்டங்களாகும்.

விளையாட்டுக் கழக அணியை கொக்குவில் பொற்பதி அணி 3-0 கோல் கணக்கில் வென்றது.

இரண்டாவது ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக அணி சென்னடி வி. கழக அணியை 3 - 0 கோல் கணக்கில் தோற்கடித்தது.

மூன்றாவது போட்டியில் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய சென் மைக்கல் விளையாட்டுக் கழக அணியை 4 -0 என்ற கோல் அடிப்படையில் வென்றது. (42)

## சிறிமாவோ கொழும்பு திரும்பினார்

(கொழும்பு)

இந்தியா சென்றிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட சித்தலைவர் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த புதன் கிழமை இரவு கொழும்பு திரும்பினார்.

வைத்திய பரிசோதனைக்காக இவர் மூன்று வாரகாலம் இந்தியாவில் தங்கியிருந்தார்.


## மரண அறிவித்தல்

### ஜி. பி. வின்சென்ற்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் உதவி பொதுச்செயலாளரும், உலகத்தமிழர் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளையின் போஷகரும், இளைப்பாறிய பாடசாலை அதிபருமான ஜி. பி. வின்சென்ற் 5ஆம் திகதி (நேற்று) காலமானார். இவர் காலஞ்சென்ற றோசலினின் அன்புக்கணவரும், பாலசிங்கம் (சட்டத்தரணி), டாக்டர் சுந்தரசிங்கம் (அவுஸ்ரேலியா) திருமதி ரஞ்சிதம் (சட்டத்தரணி - அவுஸ்ரேலியா), செல்வி சந்திரா வின்சென்ற் (விரிவுரையாளர் - அவுஸ்ரேலியா), விமலசிங்கம் (கணக்காளர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சினி (ஓமான்), தனலக்ஷ்மி (அவுஸ்ரேலியா). சீமாம்பிள்ளை (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந்தன், நில்மினி, ஜானகி, ஜனகன், வாசுகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06-04-92) பிற்பகல் 3.15 மணியளவில் யாழ். புகையிரதநிலையவீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து யாழ். அடைக்கலநாயகி மாதா கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலிப் பூசையின்பின் நல்லடக்கத்திற்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

67, புகையிரதநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வி. பாலசிங்கம்
(மகன்)

[2422]


ஆரம்பமான இவ் விழாவிற்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமை வகித்தார். பல்கலைக்கழக மாணவன் யோ. ஜெயகாந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார், தொடர்ந்து சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு.ஜோசப், தமிழீழ கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி கண்ணம்மா ஆகியோரும் தொடர்ந்து திரு.திருநாவுக்கரசு அவர்களும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

இறுதியில் நூலாசிரியர் திரு. கௌரிகாந்தன் அவர்களின் பதிலுரையும் திரு.சிவசுப்பிரமணியம் அவர்களது நன்றியுரையும் இடம்பெற்றது.(பா)

### உள்வாரி

வேறு நாடுகளின் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட பட்டங்கள் பொதுநல அமைப்புநாடுகளின் பல்கலைக்கழக சம்மேளனத்தின் வருடாந்தஏட்டில் இடம் பெற்றிருந்தால் அங்கீகரிக்கப்படும்.

ஆயினும் இவ்வாறான பொதுநலஅமைப்பு நாடுகளின் பல்கலைக்கழகசம்மேளன ஏட்டில் இடம் பெறாமல் இருப்பின் அப்பல்கலைக் கழகச் சான்றிதழை அங்கீகரிப்பது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானிக்கும்.

இவ்வாறு அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பீரங்கி

தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது.

நேற்று நண்பகல் அளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களால் பெரியளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

வுக்குத் தான் பொறுப்பாக இருந்தபோது, பொலிஸ் படைக்குள்ளேயே தனக்கு எதிரிகள் இருந்ததாக அவர் பி. பி. ஸி நிருபருக்குத் தெரிவித்திருக்கிறார்.

புலனாய்வு நடத்தியபோது கொழும்பிலுள்ள சட்டவிரோதக் கும்பல்களிடமிருந்து லஞ்சம் வாங்கிய உயர் பொலிஸ் அதிகாரிகளின் பெயர்ப் பட்டியல்கைப்பற்றப்பட்டதாகவும், இந்தப் பட்டியல் பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறார். ஆனால் இது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

### இராணுவ

புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளின் பலாபலன்கள் பற்றி முப்படைத்தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் கூட்டுப் படைத் தலைமையலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டுமெனவும் பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

அத்துடன் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சி குறித்து அதிருப்தி நிலவுவதாலும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சி புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது இருப்பதனாலும் மேலதிக பயிற்சி வழங்குவதற்கும் புதிய கட்டம் வகுக்கப் பட்டுள்ளது. போதிய பயிற்சியின்மையே யாழ். குடாநாட்டின்மீது உடன் இராணுவ நடவடிக்கை எடுக்க முடியாமைக்கு காரணம் எனவும் அறியவருகிறது.

மேலும் சிறிலங்கா இராணுவம் இதுவரைகாலமும் செயல்படுத்திவந்த தந்திரோபாயங்கள் எதிர்பார்த்த வெற்றியை தராதது மட்டுமல்லாமல் இராணுவதரப்பில் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளதால் புதிய தந்திரோபாயங்கள் குறித்து தீவிர ஆலோசனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(சென்னை)

தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் அவர்கள் கற்கை நெறியை முடிக்கும் வரை கல்வியைத் தொடர அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இலங்கை மாணவர்கள் தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவது அடுத்த கல்வியாண்டிலிருந்து நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்திரிகா குமாரணதுங்க இழிவு படுத்தப்பட்டாராம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிக் கூட்டணியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாத யாத்திரையினால் சுதந்திரக் கட்சிக்குள் பல்வேறு குழுக்கள் தோற்றம் பெற்றிருப்பதாகவும், இப் பாத யாத்திரையில் இணைந்து கொள்ள திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்க முயற்சித்த சந்தர்ப்பங்களில் அவர் இழிவு படுத்தப்பட்டதாகவும் கொழும்பில் அரசசார்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பதினேழு நாட்கள் நடைபெற்ற இப் பாதயாத்திரையில், சந்திரிகாகுமாரணதுங்க முன்னணிக்கு வருவதை அமைப்பாளர்கள் திட்டமிட்டு தடுத்ததாகவும். சுதந்திரக் கட்சியின் அரசியல் பலத்தை காட்டும் பிரசார யுக்தியாகவே இப்பாதயாத்திரை நடத்தப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீவக

யளவில் திறந்து வைக்கப்பட்டது.

இக்காரியாலயத்தினை தீவகச் சிறப்பு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர். சி. சேரலாதன் திறந்து வைத்தார். பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தீவுப் பகுதியில் உள்ள பொதுஸ்தாபனங்கள் தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வெவ்வேறு அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தீவக மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க முயற்சிகள் பல மேற்கொள்ளத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (பா)

## திடீரென ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவிருந்த காணிகளுக்கான மினிக் கச்சேரிகள் காரணம் கூறப்படாமலேயே திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## மாவிலை ஒரு ரூபாவால் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

பாண் மற்றும் கோதுமை மாவு ஆகியவற்றின் விலை ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்படலாம் என தெரியவருகின்றது

நிதிஅமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் நம்பகரமான தகவலொன்றில் உலக சந்தையில் கோதுமையின் விலை அதிகரித்துள்ளமையே இதற்கு காரணமெனச்சொல்லப்பட்டுள்ளது. மேலும் பல நுகர் பொருள்களின் சில விலைகளில் அதிகரிப்பு ஏற்படலாமெனவும் தெரிய வருகின்றது.

கள் வென்சாரக்காவின் சராசரி ஒட்டங்களாகும்.

## கப், அலெக்ஸ் ஞாபகார்த்த போட்டி

கப்டன் அலெக்ஸ் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி முடமாவடிஞானபைரவர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது.

### கட்டுக்கோப்பு

தெரிவித்த தமிழ் மக்கள்மீது சிறிலங்கா இராணுவம் இனப்படுகொலை என மாத்திரமே அழைக்கக் கூடிய வகையில் தாக்குதல்களை மேற்கொண்டது.

பல வருடகாலமாக சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே கேடயமாக விடுதலைப் புலிகள் இயங்கி வருகின்றனர்.

1987 அக்டோபரில் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி இந்திய அமைதி காக்கும் படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது அவர்கள் வெற்றி பெற முடியாத நிலையை அந்தநேரமே அடைந்தனர். தமிழ் மக்களின் நிருபிக்கப்பட்ட பாதுகாவலர்கள் என்ற நிலையில் விடுதலைப் புலிகள் இருந்த வேளையில் கொடுக்கப்பட்ட இந்த உத்தரவு மக்களின் நிலைப்பாட்டுக்கு மாறுபட்டதாகும்.

இந்திய ராணுவத்திடம் ''நீங்கள் என்றைக்காவது ஒரு நாள் சிறிலங்காவை விட்டு போகத்தான் போகிறீர்கள். அதற்குப்பின் எம்மையும் எமது மண்ணையும் சிங்களவரிடமிருந்துகாப்பாற்றப்போவது விடுதலைப் புலிகள் தான்'' என கணக்கற்ற கிராமவாசிகள் கூறினர்.

சிறிலங்காவில் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாது இருக்கும்வரை தமிழீழ மக்கள் புலிகளையே ஆதரிப்பர் என அர்ஜீன் கடோஸ் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.